M. 2330. "SIDDHANTHAM" Vol. 16. No. 6

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 16	சுபானு௵ ஆனிமீ 1943௵ ஜூன்மீ	இதழ் 6

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

"கடவுள்"

[பத்திராசிரியர்]

நாம் அறிவினை யுடையவர்கள். நாம் அறியும் பொருள்கள் பல உள; அவை சுருக்கமாக இருவகைப்படும். நம்மால் சுட்டி அறியப்படும் பொருள், சுட்டி அறியப்படாத பொருள். இதில் முதற்கூறியது ப்ரபஞ்சமாகும், இரண்டாவது கடவுள். நம் அறிவினலறியப்படாத பொருள் கடவுள். இப் என்பதாலே சுட்டி அறியப்படும் பொருள். அறியக்கூடிய பொருள். ப்ர = நன்றாக; ர்றது. சுட்டி அறியப்படும் ப்ரபஞ் டி அறியப்படாத கடவுளை அறிதல்

ப்ரபஞ்சம் இருவகைப்படும். 1. சப்தப்ரபஞ்சம் ஜலம், உலகம், நெருப்புப் போன்ற சப்தத்தையுடையன. 2. அர்த்த ப்ரபஞ்சம். அச்சப்தத்தாலுணர்த்தப்படும் பொருள்களே அர்த்தப்ரபஞ்சம். சப்த ப்ரஞ்சம் ஒலிவடிவமாயுள்ளது. அர்த்த ப்ரபஞ்சமோ அவ்வொலி யுணர்த்தும் பொருளாயுள்ளது.

கடவுள் நம் கண்ணால் காணக்கூடாத மனதால் அறிய முடியாத பொருள். அவரை எப்படி அறிதல்வேண்டும்? இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. முதலாவதாக நாம் இதற்கு முன் அனுபவித்திருக்கிற அனுபவங்கொண்டு ஊகித்து ஒரு பொருளை அறிதல். இரண்டாவதாக நாம் யாரை நம்பியிருக்கிறோமோ அவர்கள் வார்த்தையைக் கொண்டு அறிதல்.

எழுதி வைத்துப்போன நூல்களைக் கொண்டோ அல்லது ஒரு சாரார் சொல்லும் வார்த்தைகட்காகவோ நாம் கடவுள் உண்டு என்று எல்லோரையும் ஒத்துக்கொள்ளச் செய்ய முடியாது. ஆகையால் கண்ணிற்கும் மனத்திற்கும் எட்டாக் கடவுளைக் கூடியவரை புத்தியால் உணருவதே சிறந்ததாகும். கண்ட குடத்தைக் கொண்டு காணாத குயவனை நிச்சயித்தல்போல கண்ட உலகத்தைக் கொண்டு காணாத கடவுளை நிச்சயிக்க வேண்டும். பார்த்த மண்ணை யாரோ ஒருவன் குடமாகச் செய்திருக்க வேண்டும். அறிவில்லாத மண் தானே குடமாகாது. ஆகையால் அறிவுடைய ஒருவனே குடமாக்கி இருக்க வேண்டும். மண் அறிவற்றது என்பதே இம்முடிவிற்குக் காரணமாயுள்ளது.

ப்ரபஞ்சம் ஜடமா? சித்தா? அதாவது அறிவற்றதா? அறிவுள்ளதா? உலகம் இருக்கிறது. ஜடமாயிருக்கிறது. ஆகையால் யாரேனும் செய்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரவேண்டியிருக்கிறது. கடவுள் அறிவு அகண்டம். நம் அறிவு கண்டம், தடைபட்டது. குடம் ஜடமாயும்

அவயவத்தையுடையதாயு மிருக்கிறது. உலகம் ஜடமாயும் அவயவங்களாயு மிருக்கிறது. குடத்திற்கு அடி, நடு, கழுத்து முதலிய உறுப்புக்கள் உள்ளன. உலகத்திற்கும் அவன், அவள், அது என்ற உறுப்புக்கள் உள்ளன.

அவன் அவள் அது எனும்அவை மூவினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

முருகன் பெருமை

[ர. சேது அம்மையார்]

(மலர் - 16; இதழ் - 5; 80-ம் பக்கத் தொடர்ச்சி)

"சூலம் பிடித்து எமபாசம் சுழற்றித் தொடர்ந்து வரும்
காலன் தனக்கு ஒருகாலு மஞ்சேன் கடல்மீ தெழுந்த
ஆலங்குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே"

எம பயத்தை அகற்றவல்லது வேல். ஏனைய துன்பங்களைக் காட்டிலும் இறக்கும் தருவாயில், இறுதியில் நேரும் யமன் தொந்தரையையே பெருந் துன்பமாகக் கருதுவோம் நாம். அத்தகைய கொடிய துன்பத்தையும் அகற்றவல்லது வேல். வேலைப் பற்றிப் பல பேசலாம். அது வினையைப் போக்குது "வினையோட விடும் கதிர்வேல் மறவேன்" என்றுள்ளது அநுபூதியில். அன்பர்களை நீதியில் நடத்தும், இங்ஙனம் பல செய்யும் சீர்மையுடையது இவ்வேல்.

அடுத்த படியாக உள்ளன மயிலும் சேவலும். சூர சம்ஹாரத்தின் பின் சூரனுடைய இரு உயிர்களுள் சூரன் என்ற உயிர் மயிலாகவும் பதுமன் என்ற இன்னொன்று சேவ லாகவும் ஆயின. ஒன்று வாகன மாயிற்று. இன்னொன்று

கொடியாயிற்று. ஒன்றை மட்டும் தாழ்த்தி இன்னொன்றுக்கு மட்டும் உயர்வு கொடுத்தது ஏன் என்ற கேள்வி எழுமாயின் அதற்கும் காரணம் உண்டு.

எவரொருவரை எடுத்துக்கொண்ட போதிலும் அவரிடம் சில நல்ல குணங்களும் சில தீய குணங்களும் காணலாமேயன்றி, எவரேனும் முற்றும் நல்லவராக அல்லது முற்றும் தீயவராக நாம் பார்ப்பதேயில்லை. எவர்க்கும் இவ்விரு குணங்களும் அமைந்திருக்கும். ஆனால் ஒன்று மிகுந்து, இன்னொன்று குறைந்திருக்கலாம். அதேபோல் புராணத்திலும், நல்ல குணம், சத்துவ குணம் செந்நிறச் சேவலைச் சுட்டும். தீய குணம், அசத்துவ குணம், கருநிற மயிலைச் சுட்டும். சேவல் வெளிச்சத்தை விரும்பும். காலையில் கதிரவன் புறப்படும்போது கூவி உலகத்தை எழுப்பும். மயிலோ இருளை விரும்பும் தன்மையது. கருநிற முகிலைக் கண்டதும் தோகை விரித்தாடும். ஆதலின் சத்துவ குணம் உயர்த்தப்பட்டது. அசத்துவ குணம் தாழ்த்தப் பட்டது. இவ்விரண்டையும் பிரித்தது வேல், ஞானம். அருணகிரி நாதர் பெருமானும் அம்முறையிலேயே "ஆடும் பரி, வேல், அணி சேவல்" என்று வேலை நடுவில் அமைத்தார்.

இனி, முருகனின் இன்னும் பல பெருமைகளைக் கவனிப்போம். முருகனின் அன்பர்கள், முருகனையே எண்ணத்தில் எப்போதும் வைத்துள்ளோர்கள், எல்லோரும் பயப்படும் மரணபயம் ஒழிவார்கள், எமனிடம் அதிகாரம் பேசுவார்கள். கந்தரலங்காரத்திலுள்ள இரண்டு செய்யுட்களைப் பார்ப்போம்.

"பட்டிக் கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்ட லாதுவிடேன் வெய்ய சூரனைப் போய்

முட்டிப் பொருத செவ்வேற் பெருமான் திருமுன்பு நின்றேன்
கட்டிப் புறப்படடா சத்திவாள் எந்தன் கையதுவே"

காலனை 'அடா' என்று கூப்பிடுதற்கும் அவர்களுக்கு உரிமை யுண்டு.

"தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி யுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகியவென் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்று என்கைக் கெட்டவே"

இது பாட்டாகக் காணப்படவில்லை. சண்டையில் கோப மோடு பேசுகின்ற பேச்சாகவே அமைந்திருக்கின்றது.

எமனுக்கு மட்டுமல்ல, நாள் நக்ஷத்திரம் முதலியன வற்றுக்கும் அஞ்சார் முருகனின் மெய்யன்பர்.

"நாளென் செயும் வினைதான் என் செயும் எனை நாடி வந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென் செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே"

நிற்க. முருகன் குறைந்த அறிவிலே போகத்தையும் நிறைந்த அறிவிலே வீட்டையும் தருகின்றான். இரண்டை யும் ஒருவனே தருகின்றான். நடுநிலைமையி லிருப்பவள் தாய். அவள் பிறந்த குழந்தைக்குப் பால் தருகின்றாள். அவளே வளர்ந்த இளைஞனுக்குச் சற்று கடினமாகச் செரிக் கத் தக்க பலகாரங்கள் தருகின்றாள்; அவ்வாறே நடுநிலைமை யில் எப்போதுமிருக்கும் இறைவன் அவரவர் தகுதிக்கேற்ப வேண்டியவற்றை உதவுகின்றான். அவன் தரும் எவ்வொன் றும் பேரின்பத்தையே குறிக்கோளாகக்கொண்டு விளங்கு கின்றது. நிறைந்ததும் சுத்தமானதுமாக இருப்பது பேரின்பமே. போகத்தையும் வீட்டையும் உதவும் வள்ளல் அவன் ஒருவனே. அவன் ஒருவனே சிவன் முதலாகிய

ஆறுருவங்களையும் கொண்டவன். அவனொருவனே ஆறுமதங்களுக்கும் தலைவனாக வீற்றிருக்கின்றான். இவ்வுண்மைக்கு இருப்பிடமாக ஆறுமுகன் ஆறுமுகங்களும் இருக்கின்றன. “யான் ஒருவனே ஆறு சமயங்கள்தொறும் எழுந்தருளுகின்றேன். யான் ஒருவனே அங்கங்கிருந்து என்னை வணங்கும் அன்பருக்கு முத்தி தருகின்றேன்” என்று கூறுகின்றான்.

> “ ஆறு சமயந்தொறும் வேறு வேறின்றி யான் ஒருவனே
> அங்கங்கிருந்து அன்பருக்கு முத்திதரு வித்தென்று
> யாவர்க்கும் அறிவித்த வதன மணியே ”

என்பது சந்நிதிமுறை. முருகன் சமஷ்டித் தெய்வம். தனியாகப் பார்க்கும்போது சிவன் முதலிய வேறுபாடுகள் தோன்றும். போகமாகிய தானத்தையும் ஞானமாகிய தர்மத்தையும் உயிர்த் தொகைகளுக்கு அருளுகின்றன அவன் கரம். மேற் கூறியதில் வதனமணி முத்தியை யாருக்குத் தருவான் என்று நோக்குங்கால் அவன் இன்ன தேசத்துப் பிறந்தானிலன்; இன்ன குலத்தில் பிறந்தானிலன்; இன்ன காலத்து வாழ்ந்தவனிலன்; இன்ன ஆசிரமத்தைக் கைக்கொண்டவனிலன் என்றெல்லாம் நோக்காது யாரே யாயினும் அன்பு செய்வார்க்கு வீட்டின்பத்தைத் தருகின்றான். அவன் நம்மிடம் எதிர் பார்ப்பது இவ்வன்பு ஒன்றே, வேறேதுமில்லை. நாம் ஒவ்வொருவரும் அன்பை வளர்த்தல் வேண்டும். நம் உற்றார், உறவினர், நண்பர்வரை மட்டும் நிறுத்திவிடாது ஏனைய உயிர்களிடத்தும் அன்பு செலுத்தல் வேண்டும். அன்பு செலுத்துவதைத் தொண்டின் மூலமாய்த்தான் காண்பித்தல் வேண்டும். அன்பு தொண்டின் வழிப்படாவிடில் அது அன்பாகாது. முருகனிடத்திலுள்ள அன்பை அவனுக்கே தொண்டு செய்து காண்பித்தல் வேண்டும் என்ற அவசியமில்லை. அவன் குழவிகளாகிய ஏனைய

உயிர்களுக்குத் தொண்டு செய்தலே சாலும். தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பார்ப்பது போன்ற தொண்டு கிடையாது. முருகனுக்குத் தொண்டு செய்வார் முக்கரணங்களாலும் செய்யலாம். மனம், வாக்குக் காயங்கள் மயிலேறும் வள்ளிநாதன்பால் சென்றபோதே பெருமையுடையன. ஆனால் கடவுள் தொண்டுடன் உயிர்த் தொண்டும் செய்தல் வேண்டும். நம் அன்பு மேலும் மேலும் பரவி, இறவாத இன்ப அன்பாக மாறுதல் வேண்டும். நம் காரைக்காலம்மையாரும் எம்பெருமானிடத்து அத்தகைய அன்பையே வேண்டினார்கள்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார் [றும்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்இருக்க"

என்றார்

அன்பு, சிவஞான போதத்தில் சொல்லியிருப்பது போல் மலிந்தும் இருத்தல் வேண்டும் அயரா அன்பாகவும் இருக்க வேண்டும்.

நிற்க, முருகன் தனக்குப் பெருந்தீமை செய்தவனாயினும் அவன் அன்பனாயின் அருள் செய்குவான், திட்டினும் மகிழ்கின்றான். ஏன்? 'நம்மை ஆதாரமாகக்கொண்டு தானே திட்டுகின்றான் என்பது அவன் எண்ணம். முருகன் தயவுக்கு அளவேயில்லை. அன்பர்களிடத்தில் தானே செல்வான். அவர் அறியாது 'நீ யார்' என்றால் தன்னையும் அறிவிப்பான், 'நின் துன்பத்தைக் களைதற்கே வந்தேன். விரைவில் உன் துன்பங்கள் நீங்கும்' என ஆறுதல் கூறுவான். பிறர் துன்புறச் சகியான்.

"நோவ வுரையான் எம்மை நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் தளர விடான் - பாவனைய

சொல்லாய்க் குறத்தி துணைபிரியாப் போரூரன்
நல்வாய்ப்பு அரையன் நெஞ்சே நாடு"

முருகனுடைய பெருமையை அளந்தறிதற்கு எல்லை, வரம்பு கிடையாது.

"ஞானந் தானுருவாகிய நாயக னியல்பை
யானு நீயுமாய் இசைத்து மென்றால் அஃதெளிதோ!
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதும்
தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை"

என்பது போல் அவனே அவன் பெருமையை முற்றும் உணர்ந்திலன் என்றால் என்போன்ற அறிவிலும் அநுபவத்திலும் மிகச் சிறியவர்க்கு எடுத்துக் கூறுதல் முடியுமோ?

தொடர்ந்து வரும் சொல்விருந்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நீங்களனைவரும், இதுவரை, இச்சிறிய சொற்பொழிவை மிகப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

திருநீலகண்டர் புராண சாரம்

வித்துவான் - ஆ. சிவலிங்கம்,
தமிழ் விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்

உலகிற் பிறந்த நாம், துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடைய விரும்புகின்றோம். இதனால் நம்மிடம் இன்பக் குறைவும், துன்ப நிறைவும் உண்மையை அறிகிறோம். இன்பம் நல்வினை காரணமாக வருவது; இது கொள்ளத் தக்கது. துன்பம் தீவினை காரணமாக வருவது; இது தள்ளத் தக்கது. நல்வினையிற் சிறந்தது அறஞ்செய்தல். அறமாவது யாது? உண்டி, உடை, உறையுள் (இருப்பிடம்) கொடுத்தலாம். பொதுமையின் நோக்கின், வறியார்க்கு அவர்தம் வறுமையறிந்து வழங்குவது எனக் கூறலாம். வறிஞர்க்குப் பயன்படு நிலையிற் செய்வன யாவும் அறங்களே.

இவ்வறத்திற்கு இன்றியமையாச் சார்பாவது அன்பு அறம் செய்து இன்பத்தினையடைய விரும்புவோர் அன்பு உடையராதல் வேண்டும். "அறத்திற்கே அன்புசார்பென்ப" என்ற வள்ளுவர் மொழியில், மறத்திற்கும் துணையாகக் கூடிய அன்பு, அறத்திற்கும் சார்பென்பது போதரும்.

இவ்வன்பு முதிர முதிர, அருள் தோன்றும். "அருளென்னும் அன்பீன் குழவி" என்ற குறளையும் காண்க. அருளாவது யாது? பகைவரும், நண்பரும் அல்லாத நொதுமலரிடத்தே தோன்றும் பற்றுள்ளம். அதாவது இரக்கம்.

அருள் காரணமாகத் தவம் பிறக்கும். தவமாவது யாது?

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

எனும் பொய்யா மொழியைக் கண்டு தெளிக. இங்ஙனம் இயற்றப்படும் தவம் காரணமாகச் சிவம் வெளிப்படும். இச் சிவம் தரும் இன்பமே பேரின்பமாம். நல்வினை காரணமாக அடையும் இன்பமும் இதுவே. (சிற்றின்பங்கள் இப்பேரின்பத்திற்கு முன்னர் துய்க்கப்பட்டு வெறுக்கப்படுவனவாம். ஆகலின் அவற்றை பற்றி ஈண்டு கூறப்படவில்லை.)

இதுவரையும் நாம் அறிந்ததாவது: இன்பம் அடைய நல்வினை வேண்டும்; நல்வினையாவது அறம் செய்தல்; அறத்திற்கு அன்பு வேண்டும்; அன்பின் முதிர்வே அருள்; அருளால் தவம் பிறக்கும்; தவத்தினால் சிவத்தைக் காணலாம்; சிவம் தரும் இன்பமே பேரின்பம் என்பன. இதனால் சிவம் தரும் இன்பத்தை அடைய ஒருவனுக்கு அறம், அன்பு, அருள் தவம் ஆம் இவைகள் இன்றியமையாதன என்று அறிகிறோம். இவவுண்மையை வெளிப்படுப்பதே "திருநீலகண்டர் புராணம்." இவ்வுண்மையே அப்புராணத்தின் சாரம். அதனை, இனிச் சரிதத்தில் நுழைந்து கண்டு மகிழ்வாம்.

தில்லை (சிதம்பரம்) மூதூரில் குயவர் குலத்துத் தோன்றி, "அற்புதத் தனிக் கூத்தாடும், நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கா"ராகி, சிவனின் நஞ்சுதங்கிய கண்டத்தை வியந்து "திருநீலகண்

டம்," "திருநீல கண்டம்" எனப் பலகால் கூறி, அதனால் "திரு நீலகண்டர்" எனச் சிறப்புப் பெயர் வாய்க்கப் பெற்று "அருந்ததிக் கற்பின் மிக்க" மனைவியாரோடு இல்லறம் நடத்தும் நம் திருநீலகண்டர், "மன்றுளார் அடியார்க்கு என்றும், உளமகிழ் சிறப்பின்மல்க ஓடு அளித்து ஒழுகி"னார் என நம் சேக்கிழார் பெருந்தகையார் கூறுகின்றார். பேரின்பத்தை விரும்பிய நீலகண்டர் ஓடு அளித்தலாகிய அறத்தைச் செய்தனர் என ஈண்டு நாம் அறியவேண்டும். "உளமகிழ் சிறப்பின்" என்றமையின் தம்மால் விரும்பப்பட்ட அடியவர்கட்கு அன்புடன் ஓடளித்தமை பெறப்படும். அன்றியும், தாம் கொண்ட கூடா ஒழுக்கம் காரணமாகத் தம் மனைவியார் கொண்ட புலவி (ஊடல்) நீக்கவிரும்பி "வேண்டுவ இரந்து கூறி"னார் எனச் சேக்கிழார் கூறுமிடத்து, தமது மனைவி மாட்டு அடியவர்கொண்ட அன்பு வெளிப்படும். இதனால் அறத்திற்குரிய அன்புடையர் நீலகண்டர் என்பதை உணரலாம்.

மனைவியாரை மெய்யுற அணையச் செல்லுங் காலத்தில் "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" எனத் தமக்கு வைத்த ஆணையை மீறாத நீலகண்டர். தமக்குரிய - சொந்தமான - தம் வழி நடக்கும் கற்பின் மிக்க மனைவியாரை, "ஏதிலார் போல நோக்கி"னார். (ஏதிலார் - நொதுமலர்) தமது சொந்த மனைவியென்றோ, அன்றித் தம் எண்ணத்தை நிறைவேற்றாது ஆணையும் வைத்தமையால் பகைமை உடையாள் என்றோ நோக்காது, நொதுமலர் போல நோக்கியது அருள் நோக்கு என்க. இதனால் நம் அடியவர் அருளுடையவராகின்றார்.

இவ்வருள் காரணமாகத் தவம் அவர்பால் தோன்றியது. தமக்கு இளமை பாழ்படுதலாகிய நோயை (துன்பத்தை) மேற்கொண்டார். தமதெண்ணம் (மாதரைத் தீண்டாமை) கெட, மனைவியாம் உயிர்க்கு (வைத்த ஆணையை மீறுதலாகிய) உறுகணும் (துன்பம்) செய்தாரில்லை. ஆகத் தவத்தை மேற்கொண்டவர் நம் அடியார் என்பது தெரியும்.

"இந்நெறி ஒழுகும் நாளில் எரிதவிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையான் தானும் தொண்டரை விளக்கம்காண
நன்னெறி யிதுவாம் என்று ஞாலத்தார் விரும்பியுய்யும்
அந்நெறி காட்டு மாற்றால் அருட்சிவ யோகி யாகி"

— பெரிய புராணம்

வந்தார் எனச் சேக்கிழார் கூறுகின்றார். தவத்தினை மேற் கொண்ட நீலகண்டரது நெறியினை உலகறிந்து உய்ய இறைவன் விரும்பி, சிவயோகியாகி வெளிப்படுகின்றான். (வெளிப்பட்டு நீலகண்டர்பால் ஓடளித்துச் செல்லல் முதலிய யாவும் நாம் அறிந்தனவே. ஆதலின் கதையைத் தொடராது விடுகின்றேன்) இதனால் தவமுள்ள இடத்தில் சிவம் வெளிப்படும் என்பது தெரிகின்றது. இக்கட்டுரையால் "திருநீலகண்டர் புராணசாரம்" வெளிப்படும்.

[மறைத் திரு ஞானியார் அடிகள் திருக்கோவலூரில் "திருநீலகண்டர்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவில் யான் எடுத்த குறிப்பின் சாரம் இக்கட்டுரை. ஆ. சி.]

பெரிய புராணமும் தமிழர் நாகரிகமும்

[வித்துவான் - மு. இராசாக் கண்ணனார், B. O. L.]

(மலர் - 16 ; இதழ் - 3 ; 47-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஓய்வு - அமைதி, ஒவ்வொரு உயிரும் அடைய வேண்டிய பயன் உடல் தசை நாரெல்லாம் அசைவுபெற ஆடிய பின்னர்ச் 'சும்மா' ஓரிடத்திருத்தலை விரும்புவோரைக் காணுவோர், உலக ஆட்டத்திலேயே கண்ணும் கருத்துமாய் ஆண்டுகள் பல மாண்டொழிய இயைகின்றவர் 'சும்மா' அசைவற்றிருக்க விரும்பாதொழிவரோ? 'சும்மா இருத்தலையே' சமயம் கூறுகின்றது. 'சும்மா இருசொல் லறஎன்றலுமே, அம்மா பொருளொன்று மறிந்திலனே' எனச்

சமயத்தின் பயனைத் தமிழ் நாட்டு அறிஞர் ஒருவர் உரைத்துள்ளார். இச்சீரிய உயிர்ப் பயனைத் தெளிதல் அருமையினும் அருமை. இதுவே நனி நாகரிகர் காணும் முடிவு. இவ்வருமைப் பெருமை தமிழ் மக்களுடையதென்று கூறவே நாகரிகமலைக் குடுமியின்மேல் நண்ணுதலெனின் பெரியபுராணம் நாகரிகம் கூறும் நூலாகாதோ? ஆம் என்க.

பெரியபுராண ஆசிரியர், சேக்கிழார் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது ஒருவாறு விளங்குகின்றது. அவர் காலத்திற்கு முன்னிருந்தனவாகப் பல கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் நாயன்மார்களின் வரலாற்று வகைகள் புராணத்திற்குச் சிறிதும் மாறுபாடின்றிக் காணப்படுகின்றன எனின் பெரியபுராணத்தில் காணப்படும் நாகரிக ஒழுங்கை உண்மை வரலாற்றினை ஒட்டி வந்ததென உறுதியாகக் கொள்ளுதற்கு யாதொரு தடையும் இல்லை.

சேரமான்தேவர், சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை என்போரின் குறிப்புக்களை 56/1913, 57/1913, S. I. I. Vol. II 43 என்பவற்றிலும்; சண்டேசுவரர் தம் தந்தையின் குற்றத்தை நீக்கி வாழ வைத்தவர் என்பதையும் மழுவுடன் திருவுரு உடையார் என்பதையும் S. I. I. Vol. II 29, 55 என்பவற்றிலும்; நம்பி ஆரூரர், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்தடிகள் ஆகியோரை ஒன்றாகக் குறித்திருத்தலை S. I. I. Vol. II 28, 40 என்பவற்றிலும்; 'தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார் ஒருவர்' என்று மெய்ப்பொருள் நாயனார் குறிக்கப்படுவதை (சேக்கிழார் இவ்வரியைப் பொன்னேபோல் போற்றி, 'தத்தா நமர் எனத் தடுத்து வீழ்ந்தார்' என்பது நெஞ்சை உருகச் செய்கின்றது) S. I. I. Vol II 60 என்பதிலும் திருக்கண்ணப்பத்தேவர் குறிக்கப்படுவதை 125/1922 என்பதிலும் அன்பர்கள் திருத்தொண்டத் தொகை கேட்டனர் என்பதை 137/1912 என்பதிலும் காண்க. மேலும், சுவரில் மங்கி மறைந்து கிடக்கும் கல்வெட்டுக்கள் பல வெளிவரின் நாயன்மார்கள் வரலாறுகளும் பெரிய புராண வழியே பல வெளிவரும் என்

டைக் கண்டதைக் கொண்டு கூறலாம். ஆதலின் உண்மை வரலாற்று வழி இயங்கும் இப்புராணம் நாகரிகம் காணுதற்குத் தக்கதொரு நூலாகும்.

பெரியபுராண ஆசிரியர் கூறும் திருந்திய கொள்கைகள் பல இக்காலத் தமிழரிடைக் காண முடியாமை வருந்தத் தக்கது. சாதிப்பிரிவு இந்நாளில் அழுந்தி வேரூன்றி நிலைத்து நிற்கின்றது. பெரியபுராணம் தோற்றமளித்தற்குக் கருவியாய்த் திகழும் சுந்தரர், இறைவனை வழிபடும் அந்தணர் குலத்தினர்; ஆயினும் உருத்திர கணிகையர் மரபிலும் வேளாள மரபிலும் மணந்தனர் என்னும் வாய்மையை நோக்குக. திருநாட்டியத்தான்குடியில் வாழ்ந்த வேளாளர் கோட்புலி என்னும் பெரியார் தம் இரு பெண் மக்கள் வனப்பகை சிங்கடி என்பாரை ஏற்றுக்கொண்டருள வேண்டும் என்னும்பொழுது சுந்தரர் மகண்மையாக் கொண்டு 'சிங்கடி அப்பன்' என்று தாம் பாடிய பதிகத்தில் தம்மைச் சொல்லிக் கொள்ளும் வேறுபாடின்மையைக் காண்க. திருமயிலை வணிக மரபினர் சிவநேசர் தம் அருமை மகள் பூம்பாவையை மறையவர் திருஞானசம்பந்தருக்கென வளர்த்து அவ்வம்மையார் விடத்தினால் வீந்தும் எலும்பைக் குடத்திட்டு வைத்திருந்து அவர்பால் ஒப்புவிக்க அவரும் இறைவன் அருள் கொடு உயிர்ப்பித்தனர். 'அருமையால் அடியேன் பெற்ற பாவையைத் திருமணம் புணர்ந்தருள் செயும்' என்றனர் செட்டியார். 'இறைவனருள் கொண்டு மீளப் பிறக்கச் செய் தன்மையின்' திருமணம் புரிதல் தகுதியன்று என்று பிள்ளையார் மறுக்கின்றதை இந்நிகழ்ச்சிகளால் சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தொழித்து எவரும் எக்குலத்திலும் மணக்கலாம்; அவ்வாறு மணம் செய்தலே தமிழ் மக்களின் ஆற்றலைப் பெருக்கும் வழி; 'யாயும் யாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்' என வினவிய சங்க கால மக்கள் ஒழுக்கமே உயர்வு தரும் தகுதியது; எனத் தூய தமிழர் நாகரிகத்தை மட்டும் விளம்புவதன்று பெரியபுராணம்.

இந்நாளில் அந்தணர் மறைவிலிருந் துண்ணலைக் காண்கின்றோம். இவ்வழக்கம் தக்கதன்று என்று பெரியபுராணம்

மறுத்துக் காட்டுகின்றது. 'அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகளார்' இல்லத்தில் நாவரசர் உடனிருந்துண்டார் என்றலும் அந்தண மரபு வழிவந்த சுந்தரர் அரச மரபினராகிய சேரமானைப் பதியிலார் மரபினளாகிய பரவை யம்மையின் இல்லத்தில் வரவேற்று கலந்துண்டு மகிழ்ந்தனர் என்னலும் இவைபோன்ற நிகழ்ச்சிகள் பலவும் எதனை அறிவிக்கின்றன. கலந்துண்டு வாழ்ந்து வேறுபாட்டை ஒழித்து ஒற்றுமைப்படுதலின் சிறப்பினைத் தூண்டிக் காட்டும் பெரிய புராண ஆசிரியருக்குத் தமிழுலகம் செய்யும் கைம்மாறும் உண்டோ?

இந்நாளில், ஒரு கூட்டத்தினர் தீண்டுதற்குத் தக்கோரல்லர் என்று ஒதுக்கப்பட அதனால் புறச் சமய வளர்ச்சியும் அரசியலில் சில தொல்லைகளும் விளைந்து துன்பம் மிகுதலைக் காண்கின்றோம். இச்சிக்கலையும் சேக்கிழார் பெரியார் அமைச்சருக்குள்ள அரசியலில் மதி நுட்பத்துடன் கண்டு தீர்த்து வைத்திருக்கின்றனர்.

தீண்டாதார் மரபில் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் அன்பர்களுடன் திருஆலவாய்க் கோயிலில் சென்று வணங்கினார்; திருஞானசம்பந்தப் பிள்ளையாருடன் திருஆரூர்க் கோயிலில் இறைவனை வணங்கினார்; திருச்சாத்த மங்கைக்கு வந்தபோது திருநீலநக்கர் என்ற அந்தணர் இல்லில் 'நடுமனை வேதியின் பாங்கர்' இருக்க இடம் தந்தனர். வேதியில் இருந்த செந்தீபாணர் இல்லத்துள் வருதல் வேண்டியதே என்று அறிவிப்பதேபோல் வலஞ் சுழித்துக் கிளர்ந்து மகிழ்ந்தது; சம்பந்தப் பிள்ளையார் பாணரை நோக்கி, 'ஐயரே! நீர்' என்வும் 'ஐயரே!' எனவும் அழைத்தனர்; விழாவில் கலந்துகொண்ட நமிநந்தியடிகள் என்ற பெரியார் பலர் உடல் மேல்பட்டமையின் 'தீட்டு' ஆயது எனக் கருதிக் குளித்த பின்னர்ப் பூசை செய்ய எண்ணி ஒருபுறத்தயர இறைவன் அவர் கனவில் தோன்றி 'எல்லோரும் என் கணம்' என்றுரைக்க விழித்த அடிகள் உண்மை உணர்ந்து 'தீட்டு' என்பதை மறந்தார்; என இவ்வண்ணம் பல இடங்களில்

தீண்டாமை எனும் பெரிய 'மை' (குற்றம்) ஒழிதற்குப் பெருநிலையில் பாடுபட்டுள்ளது பெரியபுராணம்.

சாதிப் பிரிவும் தீண்டாமையும் தமிழ் மக்களை நூற்றுக் கணக்கான பெரும் பிரிவுகட்கு இலக்காக்கித் தமிழ் நாட்டின் ஒற்றுமையையும் ஒழுங்கையும் குலைத்துத் திரித்துச் சிதறடிக்கின்றது. தமிழ் மக்கள் பெரியபுராண காலத்தில் இவற்றை நெகிழவிட்டிருந்தனர் எனக் காண்கின்றோம். எல்லோரும் ஒருகுலம் என வாழ்ந்த இந்நாட்டு மக்கள் வேற்றின மக்கள் விரவுதலால் வேறுபடக்கண்ட சேக்கிழார் அவ் வேறுபாட்டுணர்வைப் போக்குதற்கு வரலாற்று வழிப் புராணத்தை வகுத்துத் தந்தருளியுள்ளார். இத்தகைய நோக்கதை இன்று சீர்திருத்தச் செயலில் ஈடுபடும் அறிவு பெற்றோர்க் கெல்லாம் ஆக்கம் தந்து வழிகாட்டியாக விளங்குகின்றது. சீர்திருத்தம் என நாவால் பேசி ஓய்ந்து உண்டு உறங்கும் ஒழுக்கம் மிக்கோர் புராணம் அறிவுறுத்தியுள்ள அறிவு நெறியைப் பின்பற்றி இச் செந்தமிழ் நாட்டுச் செயற்குரிய திருத்தங்களைச் செய்யின் புராணம் பாடிய மாபெருந் தமிழ்ப் பெரியார் சேக்கிழார் வழிவழி வந்த தமிழ் மரபில் பிறந்தவர்களாகின்றார்கள்.

தமிழர் நாகரிகம் எனும் தலைப்பின்கீழ் அரசியல், அமைச்சியல், குடி இயல், போர்முறை, நீதி வழங்கிய நெறி, சிற்பக் கலை, ஓவியக் கலை, பாட்டுக் கலை, மருத்துவக் கலை, பொருள் நிலை, பொருளை ஆக்கும் நெறி, இன்ப நெறி, நடையுடை, உணவு நிலை, இயற்கையைத் துய்த்த வழி, பெண் மக்களுக்கிருந்த தகுதி நிலை, தமிழைப் போற்றிய செந்நெறி, தமிழ்க் கலை பிற எனும் பல உள் தலைப்புக்களில் விரிவாகக் காணுதற் குறித்து சுருங்கிய அளவான் பெரிய புராணம் வெறும் புராணம் என மதித்தலாகாது என்பதைக் குறிப்பிடலே இக் கட்டுரையின் முழுநோக்கம். தொகுக்கப்பட்ட தலைப்புக் களின் கீழோ அன்றி வேறுவகைப் பிரிவுகளின் வழியோ புராணத்தைப் படித்துப் பயனடைவோரோ இந் நாட்டுப் பிறந்த மக்கட் பிறப்பால் அடையவேண்டிய பயனை அடைந்தோராவர்.

ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் உபந்நியாசக் குறிப்புகளினின்று

உதிர்ந்த மலர்கள்

[தொண்டன்]

1. அன்பும் அருளும் அறிவிற்கு அடையாளம். அறிவுள்ளவன் அன்பும் அருளும் உடையவன். சிற்றறிவுடையது உயிர். பேரறிவுடையது கடவுள். அன்பை வளர்க்க அறிவு வளரும். அறிவு வளரக் கடவுளை நெருங்குவோம்.

2. நன்றாக உணர்ச்சி இருக்கும்போதே ஆண்டவனை நினைத்தல் வேண்டும். பாபத்தை ஒழிக்க அவன் நாமத்தை சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும்.

3. அறுக்குஞ் சக்தி வாளுக்கு உண்டு. ஆனால் தானே அறுக்க முடியாது. அதுபோல் நினைக்குஞ் சக்தி மனத்திற்கு உண்டு. உயிரின் முன்தான் மனம் நினைக்கும்.

4. அறிவு வளர வளர சுகம். ஆசை வளர வளர துக்கம். சுகத்தை வளர்க்க வேண்டுபவன் அறிவை வெளியே இந்திரியங்கள் வழியே செலுத்தாமல் உள்ளே இருக்கும் கடவுளிடத்துச் செலுத்தல் வேண்டும்.

5. நிலைத்த மனமுடையவன் முதலிலேயே ஜபிக்கலாம். முடியாதவன் முதலில் உரத்த தொனியில் தோத்தரிக்க வேண்டும். பொருள் தெரிந்து தோத்தரித்தல் வேண்டும். தோத்தரிக்கப்படுகிற பொருளை மனத்தில் நினைத்தே தோத்தரித்தல் வேண்டும்.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam at "Thiruvalluvagam", 99-A, Kallukaran Street, Mylapore, Madras.